**<u>சார்பு நீதிமன்றம், சங்ககரி</u>**

<u>MCOP.No. 395/2015</u>

மா.சா.2

நாள்.15.06.2023.

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | பிரபாகரன் | மதம்: | இந்து |
| தகப்பனார் /கணவர் பெயர்: | த/பெ. சித்தன் | ஜாதி: | -- |
| கிராமம்: | நெடுங்குளம் | வேலை: | -- |
| வட்டம்: | எடப்பாடி | வயது: | -- |

2023 ஆம் ஆண்டு ஜீன் மாதம் 15 ஆம் நாள் மேற்குறிப்பிட்ட சாட்சியாகிய மா.சா.2 ன் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு 44 வது பிரிவின் கீழ் ந.பன்னீர்செல்வம்,பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிடப்பட்டு உறுதி கூறப்பட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

**<u>முதல் விசாரணை</u>**

நான் இந்த மனுவில் 3 ம் தரப்பினர். நான் மனுதாரர் தரப்பு வழக்கிற்கு ஆதரவாக முதல் விசாரணை சாட்சிய நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான்.

குறுக்கு விசாரணை

விபத்தின் போது மாலை 5 மணி இருக்கும். நான் விபத்து நடந்த இடத்தில் சுமார் 5 நிமிடம் இருந்தேன். நான் இருக்கும் போது போலீசார் அங்கு வரவில்லை. இது வரை போலீசார் விசாரிக்கவில்லை. விபத்தின்போது அங்கு யாரும் இல்லை. நான் தான் விபத்தை நேரில் பார்த்தேன். மனுதாரரை காரில் மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். விபத்தை ஏற்படுத்திய வாகனத்தின் பதிவு எண் எனக்கு தெரியாது. பிரமாண பத்திரிக்கையில் உள்ள வாகன எண்ணை நான் சொல்லவில்லை. நான் விபத்தை நேரில் பார்க்கவில்லை என்றால் சரியல்ல. மனுதாரர் வாகனத்தில் சென்று தானாகவே விபத்தை ஏற்படுத்திக் கொண்டார் என்றால் சரியல்ல. குமரேசனை எனக்கு பக்கத்து ஊர்க்காரர் அவரை கீழே விழுந்து நான் சென்றுபார்த்தபின்பு தான் அவர் தான் தெரிந்துக்கொண்டேன். அவரை எடப்பாடி அரசு மருத்துவமனைக்கு நான் அழைத்து செல்லவில்லை. அவருடன் சென்றது யார் என்று எனக்கு தெரியாது. நான் அனுப்பி வைக்கவில்லை. குமரேசன் எனக்கு தெரிந்தவர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஒம்/- பிரபாகரன்

ஒம்/- திரு . பன்னீர்செல்வம்,
சார்பு நீதிபதி, சங்ககிரி